கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

மானியக் கோரிக்கை எண். 7

அறிவிப்புகள்
2021-2022

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

1. சென்னை கொளத்தூரின் முக்கிய தொழிலாக விளங்கும் வண்ணமீன் வர்த்தகத்தை ஊக்குவிக்கும் விதமாகவும், அதனைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில், கொளத்தூரில் சர்வதேச தரத்திலான வண்ணமீன் வர்த்தகமையம் 50 கோடி ரூபாய் செலவில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

சென்னை கொளத்தூர் பகுதியில் வண்ண மீன்கள் உற்பத்தி, விற்பனை மற்றும் ஏற்றுமதி பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொழிலை தங்கள் வாழ்வாதாரமாக கொண்டுள்ள சுமார் 2,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் வண்ண மீன் உற்பத்தியினை பெருக்கிடவும், வண்ண மீன்களை எளிதாக சந்தைப்படுத்திடவும் மற்றும் ஏற்றுமதி மூலம் தமிழ் நாட்டின் வண்ண மீன் வர்த்தகத்தை அதிகரித்திடவும் 50 கோடி ரூபாய் செலவில் சென்னை கொளத்தூரில் வண்ண மீன் வர்த்தக மையம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன், சர்வதேச தரத்தில் நிறுவப்படும்.

## 2. பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 2,000 வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்கள் 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியத்தில் வழங்கப்படும்.

பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களின் மீன்பிடித் திறன் மற்றும் வருவாயினை அதிகரித்திட உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் அலகு ஒன்றுக்கு 40 விழுக்காடு, அதிகபட்சமாக 48,000 ரூபாய் மானியத்துடன் வழங்கப்படும். நடப்பாண்டில், 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியத்தில் 2,000 பாரம்பரிய மீனவர்களுக்கு உட்பொருத்தும் மற்றும் வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்படும்.



## 3. மீன்பிடி விசைப்படகுகளுக்கு மின்னணு மீன்பிடி அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டம் 30 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள 12 மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் முக்கிய மீன் இறங்கு தளங்களிலிருந்து மீன்பிடிக்க செல்லும் படகுகளுக்கு 30 லட்சம் ரூபாய் செலவில், இணையதளம் மூலம் மின்னணு மீன்பிடி அனுமதி சீட்டுகள் வழங்கப்படும். இதனால், புயல் மற்றும் மோசமான வானிலை போன்ற இடர்பாடு காலங்களில் கடலில் உள்ள படகுகளின் நிலையினை நிகழ்நிலையில் அறிந்து தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் மேற்கொள்ள முடியும்.

## 4. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தூர்வாரி, ஆழப்படுத்தி சீரமைக்கப்படும்.

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 240-க்கும் மேற்பட்ட விசைபடகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளன. தற்போது கடல் சீற்றம் மற்றும் காலநிலை மாற்றங்களால் அதிகப்படியான மண்படிவுகள் மற்றும் மணல் திட்டுகள் மீன்பிடி துறைமுகப் பகுதியில் ஏற்பட்டு படகுகளின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே படகுகளின் எளிதான போக்குவரத்திற்காக, மீன்பிடி துறைமுகப் பகுதி 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரி, ஆழப்படுத்தி சீரமைக்கப்படும்.



## 5. உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட 100 பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பதற்கு இடுபொருள் மானியமாக 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

விவசாய நிலங்களில் மழைநீரை சேகரிக்க பண்ணைக்குட்டைகள் அமைக்கப்படுகிறது. பண்ணைக் குட்டைகளில் சேகரிக்கப்படும் நீரில் மீன்வளர்ப்பு மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்டிடும் வகையில் 10 மாவட்டங்களில் 100 பயனாளிகளுக்கு பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பு மேற்கொள்ள 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன்குஞ்சு மற்றும் மீன்தீவனம் போன்ற இடுபொருட்கள் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

**6. கடலூர் மாவட்டத்தில் விலைமதிப்பு மிக்க நாட்டு இன விரால் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணை ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் விலைமதிப்பு மிக்க விரால் மீன்வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக, விரால் மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் விரால் மீன்குஞ்சு வளர்ப்பு மையம், ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம் அகரத்தில் அமைக்கப்படும். இத்திட்டத்தினால் மதிப்பு வாய்ந்த விரால் மீன்உற்பத்தி அதிகரிப்பதற்கும் மற்றும் மீன்வளர்ப்போருக்கு கூடுதல் வருமானம் கிடைத்திடவும் வழிவகை ஏற்படும்.



**7. செங்கல்பட்டு மாவட்டம் கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னக்குப்பம் மற்றும் கடலூர் ஆளிக்குப்பம் ஆகிய இடங்களில் மொத்தம் 39 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டத்தில் கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னக்குப்பம் மற்றும் கடலூர் ஆளிக்குப்பம் ஆகிய மீனவ கிராமங்கள் கடலரிப்பினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. கடல் சீற்றத்தினால் இக்கிராமங்களில் உள்ள மீனவர்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். எனவே இக்கிராமங்களில் உள்ள சுமார் 2,800 மீனவ குடும்பங்கள் பயனடையும் வகையில், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னக்குப்பம் மற்றும் கடலூர் ஆளிக்குப்பம் ஆகிய இடங்களில் 39 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.

**8. தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு கிராமத்தில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முகத்துவாரத்தினை நிலைப்படுத்தி மீன் இறங்குதளம் அமைக்கப்படும்.**

தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு மீனவ கிராமத்தில் கருமேனி ஆறு கடலில் சேரும் இடத்தில் மண் மேடுகள் உருவாகி முகத்துவாரம் அடைபட்டு விடுவதால், இப்பகுதி மீனவ மக்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதில் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இப்பகுதி மீனவர்கள் கடலுக்கு சென்று வர ஏற்படும் சிரமங்களை நீக்கவும், அவர்களின் வாழ்வாதாரம் மேம்படவும், மணல் மேடு உருவாகுவதை தடுத்திட நேர்கல் சுவர் அமைத்து முகத்துவாரத்தினை நிலைப் படுத்தி மீன் இறங்குதளம் அமைத்திட 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.



**9. தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் உள்ள மீன் இறங்குதளம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரத்தில் உள்ள மீன் இறங்குதளம் சேதமடைந்துள்ளது. இதனால் மீனவர்கள் படகுகளை நிறுத்துவதற்கும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் போதுமான வசதிகள் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எனவே 10 கோடி ரூபாய் செலவில் படகு அணையும் சுவர், அணுகு சாலை ஆகிய கூடுதல் வசதிகளுடன் மீன் இறங்குதளம் மேம்படுத்தப்படும்.

**10. விழுப்புரம் மாவட்டம் எக்கியார்குப்பம் மீன் இறங்குதளம் மேம்பாட்டு பணிகள் மற்றும் அனுமந்தை கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

விழுப்புரம் மாவட்டம் எக்கியார்குப்பத்தில் உள்ள மீனவர்கள் சுகாதாரமான முறையில் மீன்களை கையாள ஏலக்கூடம் இன்றி சிரமப்படுகின்றனர். மேலும் கடலரிப்பு ஏற்பட்டு கடல்நீர் மீனவ கிராமத்திற்கு உள்ளே புகும் நிலை உள்ளதால் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்து உள்ளனர். எனவே எக்கியார்குப்பம் மீன் இறங்குதளத்தில் கூடுதலாக நேர்கல் சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலைப்பின்னும் கூடம் மற்றும் சாலை வசதிகளுடன் மேம்படுத்துதல் மற்றும் அனுமந்தை கிராமத்தில் புதிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதனால் இங்குள்ள 3,200 மீனவ மக்கள் பயன் அடைவர்.



**11. தூத்துக்குடி மாவட்டம் அமலி நகர், ஜீவா நகர், ஆலந்தலை, மீனவர் காலனி மற்றும் குலசேகரபட்டிணம் ஆகிய கடலோர கிராமங்களில் மொத்தம் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

தூத்துக்குடி மாவட்டம் அமலி நகர், ஜீவா நகர், ஆலந்தலை, மீனவர் காலனி மற்றும் குலசேகரபட்டினம் ஆகிய மீனவ கிராமங்களில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் தாங்கள் கொண்டு வரும் மீன்களை சுகாதாரமான முறையில் விற்பனை செய்வதற்கும், தங்களது படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலை வசதிகளின்றி சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, இக்கிராமங்களைச் சார்ந்த சுமார் 6,200 மீனவ மக்கள் பயனடையும் வகையில், மீன்ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் மற்றும் கான்கிரீட் சாலை வசதிகளுடன் கூடிய மீன் இறங்கு தளங்கள் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**12. செங்கல்பட்டு மாவட்டம் பழைய நடுக்குப்பம், புது நடுக்குப்பம், அங்காளம்மன்குப்பம், செம்மஞ்சேரிக்குப்பம் மற்றும் கரிகாட்டுக் குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் மொத்தம் 57 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டத்தில் பழைய நடுக்குப்பம், புது நடுக்குப்பம், அங்காளம்மன்குப்பம், செம்மஞ்சேரிக் குப்பம் மற்றும் கரிகாட்டுக்குப்பம் ஆகிய மீனவ கிராமங்கள் கடலரிப்பினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. எனவே, மீனவர்களின் சிரமங்களை போக்கிடும் பொருட்டு, இக்கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் 57 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இதனால் இங்குள்ள 4,500 மீனவ மக்கள் பயன் அடைவர்.



**13. கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை, கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி ஆகிய கடலோர கிராமங்களில் 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நேர்கல் சுவர்களுடன் கூடிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

கன்னியாகுமரி மாவட்டம் கேசவன்புத்தன்துறை, கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி ஆகிய கடலோர மீனவ கிராமங்களில் பருவநிலை மாற்றங்களினால் கடலரிப்பு ஏற்பட்டு மீன்பிடிப் படகுகளை இயக்குவதில் பெரும் சிரமம் உள்ளது. இக்கிராமங்களை கடலரிப்பிலிருந்து காப்பதற்கும், சுமார் 750–க்கும் மேற்பட்ட படகுகளை பாதுகாப்பாக நிறுத்து வதற்கும், நேர்கல் சுவர்களுடன் கூடிய மீன்இறங்குதளங்கள் 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் சுமார் 8,000 மீனவர்கள் பயன் பெறுவார்கள்.

**14. மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல் மற்றும் புதுகுப்பம் மீனவ கிராமத்தில் மீன் இறங்கு தளம் மேம்படுத்துதல் மற்றும் நேர்கல் சுவர் அமைக்கும் பணிகள் 27 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசலில் மீன் இறங்குதளம், சாலை வசதிகள், படகு அணையும் தளம், கடலரிப்பு தடுப்பு சுவர் போன்ற கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்படும். புதுகுப்பம் மீனவ கிராமத்தில் பருவமழை காலங்களில் கடலரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் உட்புகுந்து விடுகிறது. எனவே திருமுல்லைவாசல் மற்றும் புதுக்குப்பம் கிராம மீனவர்கள் பயன்பெறும் சிறிய நேர்கல் சுவர்கள், வலைபின்னும் கூடம், அணுகு சாலை பணிகள் 27 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.



**15. தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழை மற்றும் வீரபாண்டியபட்டிணம் ஆகிய கடலோர கிராமங்களில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழை மற்றும் வீரபாண்டியபட்டிணம் ஆகிய மீனவ கிராமங்களில் பருவநிலை மாற்றம் காரணமாக கடல் அரிப்பு ஏற்பட்டு அங்கு அமைக்கப்பட்டிருந்த மீன்ஏலக்கூடங்கள், சாலைகள் உள்ளிட்ட கட்டுமானங்கள் சேதமடைந்துள்ளது. இப்பகுதி மீனவ மக்களை பாதுகாத்து அவர்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட நேர்கல் சுவர், மீன்ஏலக் கூடங்கள், கான்கிரீட் சாலைகள் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் சுமார் 11,000 மீனவ மக்கள் பயன் பெறுவர்.

**16. கடலூர் மாவட்டத்தில் வெள்ளார் முகத்துவாரம் நிலைப்படுத்தும் பணி 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கடலூர் மாவட்டத்தில் வெள்ளார் ஆற்று முகத்துவாரத்தின் வடக்குக்கரையில் பரங்கிப்பேட்டை மீன் இறங்குதளமும், தென்கரையில் முடசலோடை மீன் இறங்குதளமும் அமைந்துள்ளன. இவ்விரு மீன்பிடி இறங்குதளங் களிலிருந்து சுமார் 15 கிராம மீனவர்கள் 160 விசைப்படகுகளிலும் 1,000 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளும் வெள்ளாறு முகத்துவாரத்தின் வழியாக தினமும் கடலுக்கு மீன்பிடிக்க சென்று வருகின்றனர். ஆனால் இந்த முகத்துவாரம் அடிக்கடி தூர்ந்து போவதால் இங்குள்ள சுமார் 12,000 மீனவர்கள் மிகவும் பாதிப்பு அடைகின்றனர். எனவே மீனவர்களின் சிரமங்களை போக்கிடும் பொருட்டு நேர்கல்சுவர் அமைத்து முகத் துவாரத்திற்கு நிலைப்புத்தன்மை ஏற்படுத்திட 30 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.



**17. கடலூர் மாவட்டம் பெரியகுப்பம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டை ஆகிய கடலோர கிராமங்களில் கடல் அரிப்பு தடுப்பு சுவர் களுடன் கூடிய புதிய மீன் இறங்குதளங்கள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

கடலூர் மாவட்டம் பெரியகுப்பம், புதுக்குப்பம் மற்றும் சி. புதுப்பேட்டை கிராமங்களில் மீன் இறங்குதள கட்டமைப்பு வசதிகள் இல்லாததால், மீனவர்கள் தங்களின் படகுகளை பாதுகாப்பான முறையில் நிறுத்த மிகவும் சிரமப்படுகின்றனர். இம்மீனவ கிராமங்களில் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கு கடல் அரிப்பு தடுப்பு சுவர்களுடன் கூடிய மீன் இறங்கு தளங்கள் 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதனால் இங்குள்ள சுமார் 4,000 மீனவ மக்கள் பயன் அடைவர்.

**18. தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம், சிப்பிகுளம் மற்றும் கீழவைப்பார் ஆகிய கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்கள் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம், சிப்பிகுளம், மற்றும் கீழவைப்பார் ஆகிய மீனவ கிராமங்களின் கடற்கரை பகுதிகளில் பருவநிலை மாற்றம் காரணமாக கடல் அரிப்பு ஏற்பட்டு, மீனவர்கள் தங்களது மீன்பிடி படகுகளை நிறுத்துவதற்கு மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். மேலும் திரேஸ்புரம் கடற்கரை பகுதியில் மணல்மேடு ஏற்பட்டு, போதிய ஆழமின்றி காணப்படுவதால் இங்குள்ள மீன்பிடி படகுகள் மீன்பிடிக்க செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, இக்கிராமங்களில் படகு அணையும் சுவர்கள், கடற்கரை பகுதியை ஆழப்படுத்தும் பணிகள், மீன் ஏலக்கூடம் மற்றும் சாலை வசதிகள், போன்ற பணிகள் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.



**19. செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கிராமத்தில் கிழக்கு பகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கிராமத்தின் கிழக்கு பகுதியில் 350 மீனவ குடும்பங்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வசித்து வருகின்றனர். இக்கிராமத்திலுள்ள மீனவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம், வடிகால் வசதிகள் மற்றும் உட்புற சாலைகள் இல்லாமல் மிகுந்த சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே மீனவர்களின் சிரமங்களை போக்கிடும் பொருட்டு இங்கு மீன் இறங்குதளம் அமைக்கும் பணி 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**20. கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறை கிராமத்தில் கடல் அரிப்பு தடுப்பு பணிக்காக கூடுதல் நேர்கல் சுவர் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறை மீனவ கிராமத்தில் பருவமழைக் காலங்களில் ஏற்படும் காலநிலை மாற்றத்தால் கடலரிப்பு ஏற்பட்டு கடற்கரை அருகிலுள்ள வீடுகள் சேதமடைவதுடன், நாட்டுப்படகுகள் கடலுக்குள் செல்ல முடியாத சூழலும் உள்ளது. இக்கிராமத்தை கடலரிப்பில் இருந்து காப்பதற்கும், மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்து வதற்கும், நேர்கல் சுவர்களுடன் கூடிய மீன் இறங்குதளம் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**21. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

I ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணை மற்றும் திண்டுக்கல் மாவட்டம் பாலாறு பொறந்தலாறு அணை – மீன் விற்பனை மையம்.

ii. பழையார், அக்கரைப்பேட்டை, சோழியக்குடி, பூம்புகார், கடலூர்–2, மல்லிப்பட்டிணம் மற்றும் குந்துக்கல் மீன் இறங்குதளம் – டீசல் விற்பனை நிலையங்கள்.

iii. கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியார் நீர்தேக்கம் – மீன் உணவகம்.

iv. திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் – வண்ணமீன் இனவிருத்தி மையம்.

v. சென்னை, சேத்துப்பட்டு பசுமை பூங்கா – மீன்காட்சியக பொருட்கள் விற்பனை மையம்.

**22. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தமிழ்நாட்டின் 10 இடங்களில் மீனவ மகளிருக்கு முன்னுரிமை அளித்திடும் வகையில் மீன் விற்பனை அங்காடிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நவீன மீன் விற்பனை நிலையங்கள், அங்காடிகள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் மூலம் மீன் மற்றும் மீன் உணவு பொருட்களை விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் மீன் விற்பனை பணிகளில் மீனவ மகளிரை ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 10 மீன் விற்பனை அங்காடிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.



**23. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு தூத்துக்குடியில் திட்ட அலுவலகம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் வானகிரியில் டீசல் விற்பனை நிலையம் ஆகிய வசதிகள் 85 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள படகுகளுக்கு மானிய விலை மண்ணெண்ணெய் மற்றும் வரி விலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் விற்பனை தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் திட்ட அலுவலகமானது தற்போது வாடகை கட்டிடத்தில இயங்கிவருகிறது. எனவே தூத்துக்குடி மீன்பிடி துறைமுக வளாகத்தில் திட்ட அலுவலகம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம், வானகிரியில் மீன்பிடி படகு உரிமையாளர்களும், பொதுமக்களும் பயன்பெறும் சில்லறை டீசல் விற்பனை நிலையம் ஆகிய வசதிகள் 85 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**24. உள்நாட்டு மீன் வளர்ப்போரின் திறன் மேம்பாட்டிற்காக தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஒருங்கிணைந்த செயல்விளக்க மீன் பண்ணை வளாகம் 3 கோடியே 20 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, அலங்கார மீன்வளர்ப்பு மற்றும் நீரின் தரம், மீன் உணவு தயாரித்தல், உணவிடுதல் மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற தொழில்நுட்ப பயிற்சிகள் ஊரக இளைஞர்களுக்கும், சுயஉதவிக் குழுக்களுக்கும் வழங்கும் வகையில், ஒருங்கிணைந்த செயல் விளக்க மீன் பண்ணை வளாகம் தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**25. இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், மீன்வளத் தொழில்காப்பகம் மற்றும் தொழிற்சார் பயிற்சி இயக்குநரகத்தில் கடலில் மீனவர் பாதுகாப்பிற்கான பயிற்சி வசதிகள் ஒரு கோடியே 20 இலட்சம் செலவில் நிறுவப்படும்.**

தமிழக கடற்பகுதியில் ஏறத்தாழ 42,500 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களும் 5,800 விசைப்படகுகளும் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இப்படகுகளின் ஓட்டுநர்களாகப் பணியாற்றும் மீனவர்களுக்கு கடல்சார் இயந்திரங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் போதுமான அளவு பயிற்சி அளித்து, நடுக்கடலில் இயந்திரம் பழுது ஏற்பட்டு மீனவர்கள் இன்னல்படும் சூழ்நிலைகளை தவிர்த்திடும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் அமைந்துள்ள மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழிற்சார் பயிற்சி இயக்ககத்தில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நவீன மீன்பிடி இயந்திரங்களுடன் கூடிய கடல்சார் இயந்திர பயிற்சி வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**26. செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு மீன்வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழிற்சார் பயிற்சி இயக்குநரகத்தில், கொடுவா மீன்களுக்கு தீவனம் மற்றும் சிறந்த பண்ணை மேலாண்மை முறைகள் 80 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

கொடுவா மீன்களுக்கு குறைந்த செலவில் தீவனம் உருவாக்குதல் மற்றும் தகுந்த வளர்ப்பு முறையைக் கண்டறிவதன் மூலம், கடல் மீன் உற்பத்தியை 2 முதல் 5 விழுக்காடு வரை அதிகரிக்கும் வகையில், கொடுவா மீன்களுக்கு தீவனம் தயாரிக்கும் முறைகளைப் பற்றியும் அதன் வளர்ப்பு முறைகளைப் பற்றியும், செய்முறை பயிற்சி மற்றும் செயல் விளக்கம், முட்டுக்காடு மீன்வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழிற்சார் பயிற்சி இயக்குநரகத்தில் 80 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.



**27. தமிழ்நாட்டின் மீன் உற்பத்தியை அதிகரிக்க ஒருங்கிணைந்த மீன்நோய் கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் மீன்குஞ்சுகளின் தர மதிப்பீட்டினை மேற்கொள்ளும் அமைப்பு ஒரு கோடியே 30 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மீன்களில் தொடர் நோய் கண்காணிப்பு மிகவும் அவசியமாகிறது. மேலும், ஆரோக்கியமான மீன்குஞ்சுகளைத் தேர்வு செய்யும் முறைகள் மற்றும் சீரிய மேலாண்மை முறைகளைப் பற்றியும் மீன் உற்பத்தியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்கென, மீன் நோய் கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் மீன் குஞ்சுகளின் தரமதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான அமைப்பு ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**28. திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், நீருயிரி வளர்ப்பு மற்றும் மீன்வளத்திற்கான மின்னணு விரிவாக்க மையம் [DIGITAL BLUE] ஒரு கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

சிறந்த மற்றும் புதுமையான மீன்வள தொழில் நுட்பங்களை பின்பற்றி மாநிலத்தின் மீன் உற்பத்தியை பெருக்குவதற்கு ஏதுவாக, நீருயிரி வளர்ப்பு மற்றும் மீன்வளத்திற்கான மின்னணு விரிவாக்க மையம் [DIGITAL BLUE], ஒரு கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில், பொன்னேரி டாக்டர் எம். ஜி. ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், நீருயிரி வளர்ப்பு பண்ணையாளர்கள், மீனவர்கள் மற்றும் மீன்வளம் சார்ந்த தொழில்முனைவோர்கள் தொழில்நுட்ப ஆற்றல் பெற்று அறிவியல் ரீதியாக மீன் உற்பத்தியை பெருக்குவதன் மூலம் அவர்களின் வருமானம் உயரும்.